ISSN : 2455-0531

# இனம்

இனம் இனத்தைச் சேரும்!


## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர் : 1 இதழ் : 1, மே 2015    Vol. I Issue 1, May 2015






க. ப. அறவாணன் இரா. குணசீலன்

ந. இராஜேந்திரன் ச. முத்துச்செல்வம்

மு. முனீஸ்மூர்த்தி த. சத்தியராஜ் மதிப்புரை

*inam:International Research E Journal Tamil Studies*

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் முமுனீஸ்மூர்த்தி.
முனைவர் தசத்தியராஜ்.

## ஆசிரியர்குழு

முனைவர் சிலம்பு நா. செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் அ. மணி (புதுச்சேரி)
முனைவர் க. பாலாஜி (கோவை)
முனைவர் ந. இராஜேந்திரன் (பெருந்துறை)
முனைவர் சி. இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப. சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச. முத்துச்செல்வம் (கோவை)

## வெளியிடுபவர்

*முனைவர் தசத்தியராஜ்.*
கோவை
9600370671
inameditor@gmail.com
www.inamtamil.com

மே 2015 மலர் : 1 இதழ் : 1
May 2015 Volume I Issue 1

## உள்ளே ...

**பரிதாபப் பிஎச்.டி.யும் பாவ யு.ஜி.சி.யும்**
*முனைவர் க.ப.அறவாணன்* 3

**இணையத்தில் கலித்தொகை**
*முனைவர் இரா. குணசீலன்* 8

**அறநூல்களின் தோற்றத்திற்கான தேவைகளும் காரணமும்**
*முனைவர் ந. இராஜேந்திரன்* 18

**மீடியம் சிறுகதையில் வறுமைப் புனைவு**
*ச. முத்துச்செல்வம்* 24

**மலைபடுகடாம் நவிலும் மானுட விழுமியங்கள்**
*முனைவர் மு. முனீஸ்மூர்த்தி (அமுதன்)* 29

**புதுயுக நூல் வெளியீடு : கலித்தொகைப்பதிப்பும் உரைச்சிறப்பும்**
*முனைவர் த. சத்தியராஜ் (நேயக்கோ)* 35

**பீச்சி : நூல்மதிப்புரை**
*முனைவர் அருவி.தேன்மொழி* 47

inam:International Research E_Journal Tamil Studies ISSN : 2455-0531
May 2015, Issue : 1 www.inamtamil.com

# அறநூல்களின் தோற்றத்திற்கான தேவைகளும் காரணமும்



*முனைவர் ந.இராஜேந்திரன்*
*தமிழ் - உதவிப்பேராசிரியர்*
*மகாராஜா இருபாலர் கலை அறிவியல் கல்லூரி*
*பெருந்துறை - 638 052.*

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் தோன்றிய இலக்கியங்கள் யாவும் அவ்வக்காலப் பழக்கவழக்கங்களைப் பிரதிபலிப்பவையாக உள்ளன. சங்க காலத்தில் மென்மையாக உரைக்கப்பெற்ற அறங்கள் யாவும் சங்கம் மருவிய காலத்தில் தோற்றம் பெற்ற பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் வலிந்து உரைக்கப்பெற்றுள்ளன. இவ்வாறு வலிந்துரைப்பதற்கான காரணத்தினையும் அவ்விலக்கியங்கள் தோன்றுவதற்கான தேவைகளையும் ஆராயும் முகமாக இக்கட்டுரை அமைகின்றது.

***அறம்***

வாழ்க்கைக்கு உறுதி பயக்கும் பொருள்கள் அறம், பொருள், இன்பம், வீடுஎன நான்கென்பர். தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் வீடு நீங்கலாக ஏனைய மூன்றையும் குறிப்பிடுகின்றன. சான்றாக,

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை (தொல். பொருள்.களவியல்,1)

என்கிறது தொல்காப்பியம்.

***அறம் - சொற்பொருள் விளக்கம்***

அறம் என்ற சொல்லை ஆங்கிலத்தில் Ethics என்பர். இது Ethos என்ற கிரேக்க மொழியின் வழிச்சொல்லாகும்.

அறம் என்பதற்கு“கையறம், கருமம், நீர்மை, நூற்பயன் நான்கினொன்று, பெரியோரியல்பினொன்று” எனும் பொருளைத் தமிழ்மொழி அகராதியும் “கையறம், தருமம், நீர்மை, நூற்பயன் நான்கினொன்று, பெரியோரியல்பினொன்று, தகுதி, சமயம், ஞானம், நோன்பு, அறச்சாலை, வசைகவி, யமன், புனிதம், கற்பு, அறநூல், அறக்கடவுள், ஒழுக்கம், இன்சொல், இல்வாழ்க்கை” எனும் பொருளை மதுரைத் தமிழ்ப் பேரகராதியும் “தனிமனிதனின் வாழ்வும் பொது வாழ்வும் சீராக இயங்கத் தனிமனிதன், அரசு போன்றவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கத்தின் அடிப்படையிலான நெறிமுறைகள் அல்லது கடமைகள்” எனும் பொருளைக் க்ரியாவின் தற்காலத் தமிழகராதியும் விளக்கங்களாகத் தருகின்றன.

***அறம் - வலியுறுத்தல்***

அறம் சங்க காலத்திலிருந்தே வலியுறுத்தப்பெற்று வருகின்றது என்பதற்குச் சங்க நூல்களே சான்று. புலவர்களின் நோக்கம் அரசனைப் புகழ்ந்து பாடிப்பரிசில் பெறுவது மட்டுமல்ல.

பாணர்தாமரை மலையவும்,புலவர்

பூநுதல் யானையோடு புனைதேர்பண்ணவும்

அறனோ மற்றஇது விறல்மாண் குடுமி!

இன்னா ஆகப் பிறர்மண் கொண்டு,

இனிய செய்தி நின் ஆர்வலர்முகத்தே (புறநா.12:1-5)

செல்வத்துப் பயனே ஈதல்(புறநா.189:7)

போன்ற கருத்துக்களைத் தனிமனித அறமாக வலியுறுத்தியுள்ளனர். குடிமக்களை வருத்தாமல் வரிவசூலிக்க வேண்டும் என்பன போன்ற கருத்துகளின் வாயிலாகப் புலவர்கள் மன்னர்களுக்கு அறத்தினை வலியுறுத்தியுள்ளனர்.

***அறஇலக்கியங்கள் தோன்றுவதற்கான தேவையும் காரணமும்***

அறஇலக்கியங்கள் தோன்றுவதற்கான தேவையையும் காரணத்தையும் இருநிலைகளில் பகுத்து விளக்கமுடிகிறது.

1.சமயப் பின்னணி 2.மன்னர் பின்னணி

***1. சமயப்பின்னணி***

சங்க காலக்கட்டத்தில் தவறாகக் கருதப்படாத பரத்தைமை ஒழுக்கம், புலால் உண்ணுதல், கள்ளுண்ணுதல், போன்ற நெறிகள் சங்கம் மருவிய காலக்கட்டத்தில் எப்படித் தவறாகக் கருதப்பெற்றது? அப்படியெனில் சங்க காலத்திற்கும் சங்கம் மருவிய காலத்திற்கும் இடைப்பட்ட காலக்கட்டம் எவ்வளவு? அக்காலக்கட்டத்தில் தமிழ்ச் சமூகத்தில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன என்பதை ஆராய்ந்தால் அறஇலக்கியம் தோன்றுவதற்கான காரணத்தையும் அதன் தேவையையும் அறிய இயலும்.

***சங்க காலம்***

சங்க காலம் குறித்து அறிஞர்கள் பல்வேறு காலக்கட்டங்களை முன்வைத்தாலும் பெரும்பாலான அறிஞர்கள் கி.மு.3 - கி.பி.2 வரையிலான காலக்கட்டத்தையே சங்ககாலம் என்கின்றனர்.

***சங்கம் மருவியகாலம்***

கி.பி.2 - கி.பி.6 வரையிலான காலக்கட்டத்தைச் சங்கம் மருவிய காலக் கட்டம் என்பர்மது.ச.விமலானந்தம். இவற்றில் அற இலக்கியங்களான நாலடியார்கி.பி.6 ஆம் நூற்றாண்டுக்குப் பிந்தைய காலக்கட்டமாகவும், நான்மணிக்கடிகை கி.பி.4 ஆம் நூற்றாண்டாகவும், இன்னாநாற்பது கி.பி.4 ஆம் நூற்றாண்டின் முந்தைய காலக்கட்டமாகவும், இனியவைநாற்பது, திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழிநானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, போன்றவை கி.பி.5 ஆம் நூற்றாண்டாகவும், திருக்குறள் கி.பி.1 - 3

ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலக்கட்டம் என்று ஒரு சாராரும், கி.பி.6 ஆம் நூற்றாண்டு என வேறு சிலரும் கருதுகின்றனர்.

அற இலக்கியக் காலக்கட்டத்தையும் சங்க காலக்கட்டத்தையும் ஆராயும்போது இவ்விரண்டிற்கும் இடையில் இருநூற்றாண்டு இருப்பதை அறியமுடிகிறது. இவ்விரண்டு நூற்றாண்டுகளில்தான் தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் நன்கு வளர்ச்சியுற்றதாக வரலாறு கூறுகிறது.

***சமண சமயம்***

'கி.மு.3ஆம் நூற்றாண்டில் 'பத்திரபாகு' முனிவரின் சீடராகிய 'வைசாக' முனிவரால் தமிழ்நாட்டிலே சமணசமயம் பரவச் செய்யப்பட்டது என்பர்மயிலை சீனி வேங்கடசாமி. பாண்டிய நாட்டிலே மதுரை மாவட்டத்தில் காணப்படும் பிராமி கல்வெட்டெழுத்துக்கள் சமணரால் எழுதப்பட்டவை என்றும் அவை கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை என்றும் அரசாங்க ஆர்க்கியாலஜி ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறபடியால் சமண சமயம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் வந்திருக்க வேண்டும் என்று துணியப்படும். இவர்கள் கூறும் காலமும் பத்திரபாகு முனிவர்தென்திசை நோக்கி வந்த காலமும் ஒத்திருப்பதும் கருதத்தக்கது என்பர்மயிலை சீனிவேங்கடசாமி'.

***சமணர்கள் தமிழகத்திற்கு வந்ததற்கான காரணம்***

இச்சமண சமயம் செழித்து வளர்வதற்கு மற்றொரு காரணம் அவர்கள் மேற்கொண்டிருந்த தாய்மொழிப் பிரச்சாரம் ஆகும். சமணசமயத்தார்பௌத்த சமயத்தாரைப் போலவே தாங்கள் எந்தெந்த நாட்டிற்குப் போகிறார்களோ அந்தந்த நாடுகளில் வழங்குகிற தாய்மொழியிலே தங்கள் சமய நூல்களை எழுதினார்கள். இதனால் அந்தந்த நாட்டு மக்கள் எளிதிலே அந்தச் சமயக்கொள்கைகளை அறிந்து கொண்டு அவற்றைப் பின்பற்ற முடிந்தது. பிராமணர்கள் தம் வைதீக மதநூல்களை மற்றவர்படிக்கக்கூடாது, ஓதுவதைக் கேட்கவும் கூடாது என்றும் அப்படிச் செய்தவர்நாக்கை அறுக்க வேண்டும். காதில் ஈயத்தைக் காய்ச்சி உருக்கி ஊற்ற வேண்டும் என்ற தடைகளையும் தண்டனைகளையும் ஏற்படுத்திக் கொண்டது போல் அல்லாமல் பரந்து விரிந்த மனப்பான்மையும் பெருந்தன்மையும் உள்ள சமணர்கள் தமது சமய நூல்களை அந்தந்த நாட்டுத் தாய்மொழிகளிலே எழுதினார்கள். அதன்படித் தமிழிலேயும் பல நூல்களை இயற்றினார்கள். இதனால் தமிழ்நாட்டில் சமண சமயம் செழித்தோங்கத் தொடங்கிற்று என்பர்மயிலை சீனி வேங்கடசாமி.

மயிலை சீனி வேங்கடசாமியின் கருத்தினைக் கொண்டு ஆராயும்போது நாலடியாரை இயற்றியவர்கள் சமணமுனிவர்கள். நான்மணிக்கடிகையை இயற்றிய விளம்பிநாகனார்வைணவர் என்றாலும் சமண சமயக் கருத்தினையே வலியுறுத்துவதாக இயற்றியுள்ளார். இன்னா நாற்பதை இயற்றியவர்கபிலர். கபிலர்எனும் பெயரில் சங்க காலம் தொட்டு ஐவர்இருப்பதாகக் கூறி இவ்ஐவரில் இவர்சமணசமயத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம் என்பார்ச.வே.சு. இனியவை நாற்பதை இயற்றியவர்பூதஞ்சேந்தனார். இவர்எந்த மதத்தினைச் சேர்ந்தவர்என்ற குறிப்பு இல்லை. இருப்பினும் இவர்முழுக்க முழுக்கச் சமணக் கருத்துகளையே வலியுறுத்தியுள்ளார்என்பது குறிப்பிடத்தக்கது.

திருக்குறளை இயற்றியவர்திருவள்ளுவர். இவர்எந்தச் சமயத்தினைச் சேர்ந்தவர்என்ற தீர்வுக்கு வரமுடியாமல் இன்னும் விவாதம் நடைபெற்று வருகிறது. இருப்பினும் திருக்குறள் உலகப் பொதுமறையாக்கப் பெற்றுள்ளது. திரிகடுகத்தை இயற்றியவர்நல்லாதனார்.

இவர்வைணவ சமயத்தினைச் சேர்ந்தவராகச் சுட்டப்பெற்றுள்ளது. ஆசாரக்கோவையை இயற்றியவர்பெருவாயின் முள்ளியார். இவர்எந்த சமயத்தினைச் சேர்ந்தவர்என்பது சுட்டப்பெறவில்லை.

பழமொழியை இயற்றியவர்முன்றுரைஅரையனார். இவர்சமண சமயத்தைச் சேர்ந்தவர். சிறுபஞ்சமூலத்தினை இயற்றியவர்காரியாசான். இவர்சமண சமயத்தைச் சேர்ந்தவர். முதுமொழிக் காஞ்சியினை இயற்றியவர்மதுரைக் கூடலூர்க்கிழார். இவர்வேளாண் மரபினைச் சேர்ந்தவர். ஏலாதியை இயற்றியவர்கணிமேதாவியார். மேற்குறித்தவற்றில் ஐவர்சமண சமயத்தைச் சேர்ந்தவராகவும் இருவர்வைணவ மதத்தைச் சேர்ந்தவராகவும் ஒருவர்வேளாண் மரபினராகவும் குறிப்பிடப்பெற்றுள்ளது. இவற்றில் வைணவ மதத்தினைச் சேர்ந்தவரும் வேளாண் மரபினைச் சேர்ந்தவரும் ஏனைய மூவரும் சமண சமயக் கருத்தினை வலியுறுத்தியிருப்பதால் இவர்களும் சமணர்களாக மாறியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் கி.பி.3 - 6ஆம் நூற்றாண்டு வரையிலான காலக்கட்டத்தில் தமிழகத்தில் சமணர்களே ஆதிக்கம் பெற்றிருந்தனர்எனலாம்.

*2. மன்னர்பின்னணி*

'இனக்குழுச் சமூகத்தில் இருந்துதான் சீறூர்மன்னர்கள், குறுநில மன்னர்கள், வேந்தர்கள் உருப்பெற்றனர்என்பார்பெ.மாதையன்.சங்க காலக்கட்டத்தில் வேந்தர்களுக்கு இருந்த மதிப்பு, மரியாதை, புகழ் வேறு யாருக்கும் இல்லை என்றே சொல்லலாம். அந்த அளவிற்கு வேந்தர்கள் மதிக்கப்பெற்றிருந்தனர். வேந்தர்கள் இருந்த வீடு கோயில் என அழைக்கப்பெற்றுள்ளது. அப்படியெனில் வேந்தர்கள் கடவுளாக மதிக்கப் பெற்றுள்ளனர்என்பது புலனாகிறது. இவ்வாறு மதிக்கப்பெற்ற வேந்தர்கள் மக்களைக் காக்கும் கடவுளாகவும் அவர்களுக்கு (சங்கம் மருவிய கால அறம்) நீதி தேவனாகவும் இருந்தார்களா? என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும்.சான்றுகள் பின்வருமாறு:

***போர்க் கொலை***

சங்க காலத்தில் வேற்று அரசர்பகையரசரோடு போர்செய்வதற்கு முன்பே பசு, அறவோர், பெண்டிர், பிணியுடையோர், புதல்வரைப் பெறாதோர்முதலானோரைப் பாதுகாப்பான இடம் நோக்கிச் செல்லுமாறு அறிவிப்புக் கொடுத்துவிட்டுத்தான் அறப்போர்செய்ய வேண்டும். ஆனால் நன்னன் பெண்ணையே கொலை செய்திருக்கிறான் என்பதை,

ஒன்பதிற்று ஒன்பது களிற்றொரு அவள்நிரை
பொன்செய் பாவை கொடுப்பவும் கொள்ளான்
பெண்கொலை புரிந்த நன்னன் போல (குறுந்.292:3-5)

எனும் பாடலடிகள் விளக்குகின்றன. சங்க காலத்திலும் சங்கம் மருவிய காலத்திலும் கொலை செய்வதை அறமற்ற செயலாகக் கருதிய போது நன்னன் எனும் குறுநில மன்னன் ஒரு பெண்ணைக் கொலை செய்திருக்கிறான். சங்கம் மருவிய காலத்தில் ஊன் உண்ணுதல் தவறான அறமாகும். ஆனால் சங்க காலத்தில் சோழன் கரிகால் பெருவளத்தான் பொருநர்களுக்குத் தின்று கொழுத்த செம்மறிக் கிடாயின் பின் தொடையை வெட்டி, சுட்டுச் சுடச்சுடக் கொடுத்துள்ளான்.

அச்சூட்டினைப் பொறுக்காத பொருநர்கள் இடப்பக்கமும் வலப்பக்கமும் மாற்றி மாற்றிப் பற்கள் தேயக் கடித்து உண்டனர்என்பதனை,

காழின் சுட்ட கோழ்ஊன் கொழுங்குறை

ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி (பொருந.105-106)

எனும் அடிகள் விளக்குகின்றன.

***கள் உண்ணுதல்***

பரிசு பெற்று வரும் பாணன் பரிசு பெற வரும் பாணனிடம் ஒய்மாநாட்டு நல்லியக் கோடனிடம் சென்றால் பொன் பொருளோடு பாம்பு சினந்து எழுந்தது போன்ற எழுச்சியைத் (போதை) தரும் கள் தெளிவைத் தருவான் என ஆற்றுப்படுத்துவதை,

பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கிக் (சிறுபாண்.237)

எனும் அடி விளக்குகின்றது.

***பரத்தைமை***

சங்க இலக்கியத்தில் தலைவன், தலைவி, தோழி போன்றோர்க்கு எவ்வகையான இடம் கொடுக்கப்பட்டுள்ளதோ அதே அளவிற்குப் பரத்தைமைக்கும் இடம் கொடுக்கப்பட்டுள்ளது. அதே வகையில் அகநானூற்றில் இடம்பெறும் பெரும்பாலான மருதத்திணைப் பாடல்களின் மையப் பொருளாக இருப்பது பரத்தைமையே. இதனை,

எம்போல்

மாயப் பரத்தன் வாய்மொழி நம்பி

வளிபொரத் துயல்வருந் தளிபொழி மலரிற்

கண்பனியாகத் துறைப்பக் கண்பசந்தது

ஆயமு மயலும் மருளத்

தாயோம் பாய்நலம் வேண்டா தோளே (அகநா.146.8-13)

எனும் கூற்றானது பரத்தையும் தன்னைப் போலத் தன் நலனை இழந்து போவதற்கு வருந்தும் தலைவியின் மனநிலையை வெளிப்படுத்துகிறது.

மேற்குறித்த சங்க இலக்கியக் கால அறங்கள் யாவும் சங்கம் மருவிய கால அறங்களுக்கு நேர்எதிராக இருந்ததால் சமண சமயத்தினைப் பரப்பவந்த சமணத் துறவிகள் மன்னனிடம் சென்றால் தீர்வு கிட்டாது என்பதை உணர்ந்து நேரடியாக மக்களிடம் தங்கள் கருத்துக்களைத் திணிக்க நினைத்தனர். இக்காலக்கட்டத்தில் தமிழ் வேந்தர்களும் மன்னர்களும் ஒருவருக்கொருவர்சண்டையிட்டுக்கொண்டு தங்கள் வலிமையினைக் குறைத்துக் கொண்டிருந்தனர். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணிய சமணர்கள் தமிழ்மொழியை நன்கு கற்று, பின் தங்கள் சமயக் கருத்துக்களைத் தமிழ் நூல் வடிவில் எழுதித் தமிழர்கள் கையில் தவழவிட்டனர்.

மன்னன்எவ்வழி குடிகள் அவ்வழி என்ற கோட்பாட்டை உடைத்து மன்னர்களுக்கு மதிப்பளிக்காமல் மக்களைச் சுயமாகச் சிந்திக்கச் செய்து மக்களாட்சிக்கு வழிவகை செய்துள்ளனர்சமண சமயத்தினரும் பௌத்த சமயத்தினரும்.

கி.மு.3 ஆம் நூற்றாண்டிலே தமிழகத்திற்குள் நுழைந்த சமண, பௌத்தர்கள் மன்னராட்சியில் நடைபெற்ற அறமற்ற செயல்களைக் கண்டு வருந்தி, மக்களை விடுவிக்க எண்ணினர். இதன் விளைவே மன்னன் எவ்வழி குடிகள் அவ்வழி எனும் கோட்பாடு உடைக்கப்பெற்று மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கப்பெற்றது.

***முடிவுரை***

சங்க நூல்கள் பெரும்பாலும் காதலைப் பற்றியும் வீரத்தைப் பற்றியுமே வலியுறுத்திக் கூறுகின்றன. இவ்விரண்டைப் பற்றிக் கூறும் பாடல்களிலும் நூல்களிலும் அறநெறியைப் பற்றிய செய்திகளும் ஆங்காங்கே கலந்து காணப்படுகின்றன. நல்லொழுக்கத்தை வலியுறுத்தும் நீதி மொழிகளும் அமைந்திருக்கின்றன. ஆயினும் நீதிகளைப் பற்றி மட்டும்/ஒழுக்கத்தைப் பற்றி மட்டும் தனியாகக் கூறப்படும் சங்க நூல்கள் இல்லை.

முதன்முதலில் ஒழுக்கத்தைப் பற்றித் தனித்தனியாக எழுதப்பட்ட நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களின் தொகுதியிலேதான் காணப்படுகின்றன. பதினெண்கீழ்க்கணக்கில் உள்ள பதினெட்டு நூல்களிலே நீதிநூல்கள் பதினொன்றுஎன்பது குறிப்பிடத்தக்கது.

சமண - பௌத்த சமயங்கள் தமிழ்நாட்டில் மிகுதியாகப் பரவிய பிறகுதான் ஒழுக்கத்தைப் பற்றித் தனியாகத் தமிழ்நூல்கள் எழுதப்பட்டன. சமணமும் பௌத்தமும் ஒழுக்க நெறியையே அடிப்படையாகக் கொண்டவை.

அறம் காலத்திற்கு ஏற்றவாறும் இடத்திற்கு ஏற்றவாறும் மக்களுக்கு ஏற்றவாறும் தன்னை உருமாற்றிக்கொள்ளும் என்பதைச் சங்க நூல்களின் வாயிலாக அறியமுடிகிறது.

சங்க காலத்தில் குற்றமாகக் கருதப்பெறாத மனித நெறிகள், சங்கம் மருவிய காலத்தில் குற்றமாகக் கருதப்பெற்றதற்குக் காரணம் சமண, பௌத்த சமயக் கருத்துக்களே ஆகும்.

சமண, பௌத்த சமயக் கொள்கைகளை நிலைநிறுத்திக் கொள்வதற்கும் சங்க கால மன்னர்களின் ஆதிக்கத்தை, அவர்கள் காலத்து நெறிகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் அறநூல்கள் தோற்றம் பெற்றன எனலாம்.

***துணைநின்ற நூல்கள்***

1. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, 1999.
2. கதிரைவேற்பிள்ளை நா., தமிழ்மொழி அகராதி, 2005.
3. சுப்பிரமணியன் ச.வே., தமிழ்ச் செவ்வியல் நூல்கள் மூலம்முழுவதும், 2008.
4. தமிழண்ணல், தொல்காப்பியம், 2011.
5. நாகராசன் வி.( உ(ஆ., குறுந்தொகை மூலமும்உரையும், என்எச்.பி.சி., 2004.
6. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, சந்தியா பதிப்பகம், 2004.
7. மாதையன் பெ., சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும்,2004.
8. வாசுகிசி., அறமும் அறிவியலும், 2011.
9. விமலானந்தம்மது.ச., தமிழ் இலக்கிய வரலாறு, 2004.
10. வேங்கடசாமிமயிலை சீனி., சமணமும் தமிழும், 2006.
11. ...................., பௌத்தமும் தமிழும், 2006.